2

0

2

1

# செயலாற்றுகை அறிக்கை

அபிவிருத்தி நிதித் திணைக்களம்

# 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர்: **அபிவிருத்தி நிதித் திணைக்களம்**

செலவினத் தலைப்பு: **243**

## உள்ளடக்கம்

**அத்தியாயங்கள்**


1. நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு
2. முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்
3. வருடத்திற்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை
4. செயலாற்றுகை சுட்டிகள்
5. பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை
6. மனித வள விபரம்
7. இணக்க அறிக்கை

## அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/நிறைவேற்றுப் பொழிப்பு

### 1.1 அறிமுகம்:

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் நுண்நிதித் துறையை புத்துயிர் பெறச் செய்வதற்காகவும் 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி அபிவிருத்தி நிதித் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. 12 பதவி நிலை உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக மொத்தமாக 40 ஆளணியினரைக் கொண்டுள்ளது.

#### 1.1.1 ஆரம்பத் துறை அபிவிருத்தி

அரசின் அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், ஆரம்பத்துறை பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் வளர்ந்து வரும் துறைகளுக்கு பொருத்தமான கொள்கைகளை தயாரித்தல்

#### 1.1.2 நுண்நிதித்துறை அபிவிருத்தி

வறுமையொழிப்புக்காக உலகளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அணுகு முறையான நுண்நிதியீட்டம் கடந்த பல தசாப்தங்களாக இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கையில் நாடளாவிய ரீதியில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் கிராமிய மட்டத்தில் வணிக வங்கிகளினதும், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகள் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றது. நுண்நிதிக்கடன் நடுத்தர வருமானம் பெறும் குடும்பத்தினரது வருவாயையும் மற்றும் சொத்துக்களையும் அதிகரிக்கவும், குறைவருமானம் பெறும் குடும்பத்தினரது நுகர்வுச் செலவை அதிகரிக்கவும், அவர்களது சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும், கிட்டத்தட்ட அனைத்து வருமானக் குழுக்களுக்கிடையிலும் நுகர்வை இலகுபடுத்தும் ஒரு கருவியாகப் பணியாற்றியுள்ளதோடு மற்றும் பெண்களின் சமூக, மட்டத்தினை அதிகரிப்பதற்கும் மற்றும் பொருளாதார நிலைமைகளை விருத்தி செய்வதற்கும் பேருதவி புரிகிறது.

#### 1.1.3 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறையின் அபிவிருத்தி

இலங்கை அரசின் ஒட்டு மொத்த கொள்கை நோக்கில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பிரிவு, பிரதான மூலோபாயத் துறையொன்றாக இனங்காணப்பட்டுள்ளதோடு, இத்துறைகள் பொருளாதார வளர்ச்சி, பிரதேச அபிவிருத்தி, வேலைவாய்ப்புக்களின் உருவாக்கம், மற்றும் வறுமையொழிப்பு என்பனவற்றினை உள்ளடக்கிய மாற்றத்திற்கான ஒரு உந்துதலாகக் காணப்படுகின்றது. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறை இலங்கையின் மொத்த தொழில்முயற்சிகளில் 75% இற்கும் அதிகமான தொகைக்கும், வேலைவாய்ப்பில் 45% இற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% இற்கும் பங்களிப்புச் செலுத்துவதனால், அது

இலங்கையின் பொருளாதாரத்தில் பொருத்தமான முறையில் காட்டப்பட்டுள்ளது.

### 1.1.4 அபிவிருத்தி நிதி பற்றிய உபாயத் திட்டமிடல்

உற்பத்தியாளர்கள் தமது பயிர் நிலத்தில் வழங்கும் விலையை உறுதி செய்யும் அதே வேளை, நிலையான சந்தை விலையொன்றை வழங்குவதற்காக மேலதிக பயிர் அறுவடையை முகாமை செய்து சிறிய மற்றும் நடுத்தர அளவிலான விவசாயிகள் மற்றும் ஏனைய சந்தைக் காரணிகளின் மீது கவனம் செலுத்துவதன் மூலம் நிரம்பல் பிரிவையும் மற்றும் கேள்வித் தரப்பினரையும் சமநிலைப்படுத்தல்.

தேசிய பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைக்கு பெறுமதியான பங்களிப்பைச் செலுத்தி சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்து புதிய தொழில்முயற்சியாளர்களை இனங்காண்பதை நோக்காகக் கொண்டு இத்திணைக்களத்தின் தலையீட்டுடன் சலுகைக்கடன்கள், திறைசேரிப் பிணை, மற்றும் தொழிநுட்ப உதவிகள் உட்பட அரசின் பல்வேறு சலுகைகளை வழங்குதலானது மேற்கொள்ளப்படுகின்றன.

## 1.2 நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

**நோக்கு :**

“அபிவிருத்தி நிதிக்குத் தேவையான சகல வசதிகளையும் வழங்கும் பிரதான அரச நிறுவனமாக மாறுதல்’’

**பணிக்கூற்று :**

“தொடர்புடைய பங்குதாரர்களின் தேவையான பங்கேற்பின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளின் அபிவிருத்தி மற்றும் முதன்மைத் துறைக்கான நிதியை அளிப்பதற்காக பொருத்தமான கொள்கைகளையும் மற்றும் உபாயங்களையும் தயாரிப்பதற்கும் மற்றும் நிதி மூலங்களை திரட்டுவதற்கும் வசதியளித்தல்’’

**குறிக்கோள் :**

‘‘மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்வதையும் மற்றும் நுண்நிதித்துறையை புத்துயிரூட்டுவதையும் குறிக்கோளாகக் கொண்டு 2005 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி அபிவிருத்தி நிதித் திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது.”

## 1.3 பிரதான தொழிற்பாடுகள்

1.3.1 நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்குப் பொருத்தமான கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

1.3.2 சந்தைத் தரவுகளை மீளாய்வு செய்து நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் பிரதான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றின் வளர்ச்சிக்கு அவசியமான வினைத்திறனான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

1.3.3 பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கும், அரசினால் அமுல்படுத்தப்படும் மானியத் திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் கொள்கைகளை வகுப்பதற்கான வசதிகளை வழங்குதல்.

1.3.4 சந்தையின் கேள்விக்கேற்ப வங்கியியல், காப்புறுதி, நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி பிரிவு மற்றும் நிதித் துறைக்கான சட்ட உருவாக்கத்திற்கு தேவையான வசதிகளை உருவாக்குதல்.

1.3.5 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை, வங்கித் துறை, நிதிச் சந்தை மற்றும் ஏனைய துறைகள் தொடர்பான அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்டத் தயாரிப்புச் செயன்முறைக்கு வசதியளித்தல்.


1.3.6 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறை, முதன்மை துறை மற்றும் ஏனைய துறைகளுடன் தொடர்புடைய வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வெளிநாட்டு கடன் உதவிகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

1.3.7 நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சித் துறைகள் தொடர்பான விவசாயம், தொழில்நுட்ப, மற்றும் சேவை பிரிவுகளில் சகல தரவுகளைத் தொகுத்தலும், அவற்றை ஆய்வு செய்து காணப்படும் தடைகளைக் கண்டறிந்து கொள்கையளவில் தலையிட்டுத் தீர்த்து வைத்தல்.

1.3.8 அரசாங்க அனுசரணையின் கீழ் அமுல்படுத்தப்படும் நிதி உதவித் திட்டங்களை மேற்பார்வை செய்தல்.

1.3.9 அரச கொள்கைகளுக்கிணங்க நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி நிதித் துறைகளின் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக உள்நாட்டு வங்கிகளின் நிதி வசதிகளை ஏற்படுத்தல்.

## 1.4 நிறுவன வரைபடம்



**1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்/திணைக்களங்களின் பிரதான பிரிவுகள் /மாவட்ட செயலகங்களின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள்**

1. ஆரம்ப துறை அபிவிருத்தி
2. நுண்நிதித்துறை அபிவிருத்தி

**1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களம்/திணைக்களங்களின் பிரதான பிரிவுகள் /மாவட்ட செயலகங்களின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள்**

1. ஆரம்ப துறை அபிவிருத்தி பிரிவு
2. நுண்நிதித்துறை அபிவிருத்தி பிரிவு
3. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறை அபிவிருத்தி பிரிவு
4. அபிவிருத்தி நிதி பற்றிய உபாயத் திட்டமிடல்
5. விசேட வேலைகள் / கருத்திட்டங்கள்

**1.6 அமைச்சு/ திணைக்களம் பிரதேச செயலகங்களின் கீழுள்ள நிதியம்**

**1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்)**

| கருத்திட்டத்தின் பெயர் | நிதி வழங்கும் நிறுவனம் | கருத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட செலவு (ரூ. மில்லியன்) | கருத்திட்டத்தின் கால அளவு |
|---|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் கடன் நிகழ்ச்சித் திட்டம் | ஆசிய அபிவிருத்தி வங்கி | 61,213 | 2016-2024 |
| கூரைமீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி உருவாக்க கடன் நிகழ்ச்சித் திட்டம் | | 9,415 | 2019-2022 |

**அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்**

- கொவிட் 19 உலகளாவிய தொற்று காரணமாக கணிக்க முடியாத வகையில் எதிர்மறையான பாதிப்பு 2020ஆம் வருடம் தொடக்கம் தொடர்ச்சியாக உள்ளதுடன் 2021ஆம் வருடத்தில் பொருளாதாரத்தில் சகல துறைகளிலும் தாக்கம் செலுத்தியுள்ளது. இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்களிப்பு செலுத்தும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களின் பங்களிப்பு குறைவடைந்தமையால் இந்த தொற்று காரணமாக அதிகளவில் பாதிப்புற்ற பிரிவினராக உள்ளனர்.

அதனால், அரசாங்கத்தினால் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கு உதவி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் நிதி ஸ்திரப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்காக அவர்களது நிதிச்சுமையை குறைப்பதற்காக தேவைப்படும் கொள்கைகளில் மாற்றம் மற்றும் நிதியுதவி வழங்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் உதவி வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பிரதான நிறுவனமாக அரசின் புதிதாக நுழைபவர்களுக்கு அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் 2021ஆம் வருடத்தில் கொள்கை திருத்தம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்காக ஒத்துழைக்கும் வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

- சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்காக உதவியளிக்கும் பிரதான கருத்திட்டமான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் திட்டமானது (SMELoC) 2021ஆம் வருடத்தில் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த கடன் திட்டம் மூன்று அடிப்படை கூறுகளை கொண்டுள்ளது. எனினும் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் உதவி திட்டமானது (We-Fi) உடன் தொடர்புள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் கடன் கூறுகளில் (SME) கொவிட் பெருந்தொற்று காரணமாக பாதிப்புக்குள்ளான நுண்ஈ சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தொடர்பில் நிலையான முதலீட்டு வசதிகள் அளிக்கப்பட்ட கொவிட் - 19 அவசர நிலைமை கடன் வசதிகள் (ERC) மற்றும் சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தொடர்பில் ஏற்படுத்தப்பட்ட கடன் திட்டமாகும்.

- 2021 வருடத்தில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் கடன் கூறுகளின் கீழ் அன்னளவாக 1,900 மில்லியன் ரூபா தொழில் முயற்சியாளர்கள் 192 பேருக்கு முதலீட்டு கடனாக பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் 128 மில்லியன் ரூபா 112 பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு முதலீட்டு கடனாக பெண் தொழில் முயற்சிகளுக்கு நிதியுதவி (We-Fi) இன் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக 2021ஆம் வருடத்தில் கொவிட் - 19 அவசர நிலை கடன் வசதியின் கீழ் கொவிட் நிலைமை காரணமாக பாதிப்புக்குள்ளான சிறிய மற்றும் நடுத்தர தொழில் 2,107ஐ மீண்டும் கட்டியெழுப்புவதற்காக 11,300 மில்லியன் ரூபாவுக்கு அன்னளவான தொகை தொழில் மூலதன கடனாக பெற்றுக் கொடுக்கப்பட்டது. விவசாய மற்றும் விவசாயத்துறை உற்பத்திகள், கைத்தொழில், சுற்றுலாத்துறை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்துறை ஆகியவற்றை பொருளாதாரத்தில் முன்னனி பிரிவுகளுக்கு இந்த நிதி வழங்கப்பட்டது.

- புதிய கருத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்ட சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட கடன் திட்டத்தின் கீழ் புது தேயிலை நடல், தேயிலை மீள் நடுகை, நீர்பாசன வசதி ஏற்படுத்திக் கொடுத்தல், கன்று மேடைகளின் அபிவிருத்தி மற்றும் இயந்திரமயமாக்கல் ஆகியவை தொடர்பாக 330 சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு ரூ. 551 மில்லியன் கடன் வசதி பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதற்கிடையில் 2021ஆம் வருடத்தில் 265 சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்காக தேயிலை புதுநடுகை மற்றும் மீள் நடுகை ஆகியவற்றுக்காக கடனும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. முழுக் கடன் தொகையில் 56 வீதமானது தேயிலை மீள் நடுகைக்காவும் 27 வீதமானவை தேயிலை புது நடுகைக்காகவும் வழங்கப்பட்டது.

- சூழல் பாதுகாப்புக்காக குறைந்த செலவின் கீழ் எரிசக்தி பாவனையை முகாமைத்துவம் செய்வதற்காக கரிம எரிபொருளிலிருந்து மீளப்புத்துயிராக்கக் கூடிய மின்வலுவின் மூலம் பூர்த்தி செய்யும் நோக்கில் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பங்களிப்புடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி முறைமை மூலம் சூரிய மின்சக்தி உருவாக்கக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. 2018ஆம் வருடத்தில் கருத்திட்டத்தின் ஆரம்பத்தில் தேசிய மின்சக்தித் தேவையின் 50 மெகா வோட் மின்சாரத்தை பெற்றுக் கொடுக்கும் அடிப்படை நோக்குடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் 50 ஐ.அ.டொ. பெற்றுக் கொடுக்கப்பட்டது. 2021 வருட இறுதியில் 9,415 மில்லியன் ரூபா 5,449 பாவனையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் கருத்திட்டத்தின் முழுத் தொகையும் வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டது. அதனூடாக தேசிய மின்சக்தித் தேவையின் 70 மெகா வோட் மின்சாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் 140 வீதம் அன்றாட பாவனையின் நோக்காகக் கொண்டுள்ளது.

- 2021/22 பொரும்போகத்தில் நெற் பயிர்செய்கைக்காக தேவைப்படும் இயற்கைக்கு தீங்கு விளைவிக்காத உரம் மூலம் முகாமைத்துவம் செய்யப்பட்டது. இயற்கை உர பாவனையை மேம்படுத்தும் ஒரு கட்டமாக 9,317 மில்லியன் பெறுமதியான இயற்கை பசளை, திரவ உரம் மற்றும் கரிம உர வடிவில் உரத்தை வழங்குவதற்கு இசைவான உர உற்பத்தியில் ஈடுபடும் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய உற்பத்தியாளர்களுடன் ஒப்பந்தப்பம் ஏற்படுத்திக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய, நாட்டின் உர தேவையை பூர்த்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இயற்கை பசளை உற்பத்தியில் ஈடுபடும் புதிய 17 உற்பத்தியாளர்களுக்கு முற்பணம் வழங்குவதற்காக இத் திணைக்களத்திற்கு 787 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2021/22 பெரும் போகத்தில் நெற் பயிர் செய்கைக்காக பொட்டாசியம் மற்றும் நைட்ரஜன் ஆகியவற்றின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்வதற்காக பொட்டாசியம் 30,000 மெ.

தொ. க்ளோரைட் மற்றும் நனோ நைட்ரஜன் 153,227 லீட்டர் இறக்குமதி செய்யப்பட்டது.

- அத்துடன் தமது பயிர்செய்கைக்காக தேவையான இயற்கை பசளை உற்பத்தியில் சுயமாக ஈடுபடக் கூடிய விவசாயிகளுக்கு ஹெக்டேயர் ஒன்றுக்கு ரூ. 12,500 அடிப்படையில் ஆகக்கூடியது 2 ஹெக்டேயர்வரை பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது. அதற்காக கமநலசேவை திணைக்களத்திற்கு இதுவரை 5,800 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. கரிம உர பாவனையை ஊக்குவிக்கும் விதத்தில், கரிம உர பாவனையால் தமது அறுவடை குறைவடைந்த விவசாயிகளுக்கு நட்டஈடு பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. அத்துடன், நெல் கொள்வனவு சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் கிலோ ஒன்றுக்கு 90 ரூபா உயரிய தொகையாக அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டது. ஏவ்வாறெனினும், 2022ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் இயற்கை பசளை கொள்கை தொடர்பில் திருத்தம் செய்யப்பட்டது.

  ஏனைய பயிர்செய்கை தொடர்பில் உர மானியம் வேலைத்திட்டத்திற்க பதிலாக உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட சலுகையை பெற்றுக் கொடுப்பதற்கு அரசினால் யோசனை முன்வைக்கப்பட்டது. ஆத்துடன், ஏனைய பயிர் செய்கைக்காக தேவையான உரம் போட்டிச் சந்தையின் விலையில் திறந்த சந்தையில் கொள்வனவு செய்யக் கூடியதாயிருக்கும்.

- 2021.04.27ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கமைய, இயற்கை பசளை உற்பத்தியில் ஈடுபடுவோர் மற்றும் இயற்கை உர பாவனைக்கு மாற்றமடைந்துள்ள விவசாயிகளுக்கு தேவையான மானியங்களை வழங்கல் அடங்கலாக அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுரைகள் திரைசேரியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதற்கமைய இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஆகியவற்றுடன் இயற்கை பசளை, கிருமி நாசினிகள் மற்றும் களை கொல்லிகள் உற்பத்தியாளர்களுக்கு வருடத்திற்கு 8 வீத வட்டியில் கடன் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. ஆதற்கமைய இயற்கை பசளை, கிருமி நாசினிகள் மற்றும் களை கொல்லிகள் உற்பத்தி தொடர்பில் தகைமை பெற்ற உள்நாட்டு உற்பத்தியாளர்கள் 22 பேருக்கு 137.5 மில்லியன் ரூபா மேற்கூறப்பட்ட மூன்று வங்கிகளுடாக பெற்றுக் கொடுக்கப்பட்டது.

- கோவிட் பெருந்தொற்று காலப்பகுதியில் நாட்டில் உணவு பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டிய தடைகள் ஏற்பட்டது. அதற்கமைய, 2020-2021ஆம் வருடங்களில் நாட்டின் உணவு பாதுகாப்பு நிலைமையை முகாமைத்துவம் செய்வது முக்கியமானதாகவிருந்தது. 2021ஆம் வருடத்தில் உள்நாட்டில் நெற்

பயிர்செய்கைக்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு அரசு கூடுதலான அவதானத்தை செலுத்தியது. அதற்கு பிரதிபலனாக அரசினால் நெற் பயிர்செய்கைக்காக கூடுதல் கவனம் செலுத்தப்பட்டதுடன் நெற் பயிர்செய்கைக்கு தேவையான இடுகைப் பொருட்களை பகிர்ந்தளித்தல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக, அதாவது உரம் பகிர்ந்தளித்தல், விதை நெல் பகிர்ந்தளித்தல், நீர்பாசன வசதியை ஏற்படுத்தல் மற்றும் விரிவாக்கல் சேவையை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நெல் பயிர் செய்கைக்காக விசாயிகளை ஊக்கப்படுத்தல் தொடர்பில் பயிர் செய்யப்படும் நெல் தொடர்பில் சான்றுப்படுத்தப்பட்ட விலையொன்றை நடைமுறைப்படுத்தலோடு, நெல் உற்பத்தியை மேம்படுத்துவதற்காக இந்த முறைமை கையாளப்பட்டது.

- 2021ஆம் வருடத்தில் அரசினால் நெல் கொள்வனவு தொடர்பில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு சமனான கவனத்தில் கொள்ளத்தக்க கூடிய விலையில் தனியார் பிரிவினரிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்பட்டது. அதற்கமைய, வங்கித்துறையூடாக தேவையான நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன் தனியார் துறையிடமிருந்து நெல் கொள்வனவு செய்யும் நடைமுறைக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு நல்கியதுடன் 2021ஆம் வருடத்தில் தனியார் துறையிடமிருந்து நெல் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட நிதியானது ஆதாரமாகவிருந்தது. அதன் பிரதிபலனாக நெல் கொள்வனவுக்காக 2021ஆம் வருடத்தில் தனியார் பிரிவுக்கு அரசு மற்றும் தனியார் வங்கிகளூடாக வழங்கப்பட்ட கடன் தொகையானது கடன் பெறுமதியில் 202 வருடத்தின் ஒப்பீட்டளவின் வரிசைப்படி 33சதவீதம் மற்றும் 60 சதவீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

- கீழ் மற்றும் நடுத்தர வருமானமுடைய தொழில் படைக்கு வீடமைப்பு அதிகார சபையினால் (UDA) நகர்புற குடியேற்ற அபிவிருத்தி சபையினால் (USDA) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி சபை (NHDA) ஊடாக அமைக்கப்படும் வீடமைப்பு தொகுதியில் வீடொன்றை கொள்வனவு செய்வதற்கு ஆதரவு நல்குவதற்காக 2021 வருடத்தின் வரவ செலவு திட்டத்தின் யோசனைக்கமைய ‘‘சொந்துரு கெதல்ல’’ வீடமைப்பு கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய அரச வங்கிகளூடாக சலுகை வட்டி கடன் அடிப்படையில் கடன் வசதி பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக தேவையான வழிகாட்டல்கள் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ளது.

**கீதா விமலவீர**
**பணிப்பாளர் நாயகம்**
**திறைசேரி செயலாளருக்காக**

# அத்தியாயம் 03 – 2021 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

**ஏசீஏ- எப்**

**2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

(ரூபா)

| பாதீட்டு 2021 | | குறிப்பு | உண்மை நிலை 2021 | உண்மை நிலை திருத்தப்பட்ட 2020 | |
|---|---|---|---|---|---|
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 36,391,751,969 | 69,652,175,495 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 91,525 | 534,945 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 4,597,091 | 4,322,850 | ஏசீஏ-5 |
| - | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | | | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **36,396,440,585** | **69,657,033,291** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **36,396,440,585** | **69,657,033,291** | |
| | **திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)** | | | | |
| | **தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)** | | **36,396,440,585** | **69,657,033,291** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | - | ஏசீஏ-2(ii) |
| 48,900,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 40,101,482 | 38,983,334 | ஏசீஏ-2(ii) |
| 798,550,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 706,860,349 | 10,329,967 | ஏசீஏ-2(ii) |
| 36,302,700,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 35,291,279,934 | 69,238,257,[illegible] | ஏசீஏ-2(ii) |
| | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| - | | | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| 37,150,150,000 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | **36,038,241,765** | **69,287,570,951** | |
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| 600,000 | மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 422,015 | | |
| 30,600,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 1,194,064 | 17,251,165 | |
| 1,100,500,000 | மூலதன மாற்றல்கள் | 12 | 988,690,896 | 1,094,876,774 | **ஏசீஏ-2(ii)** |
| 18,180,000,000 | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | 18,000,832,439 | 13,738,408,212 | |
| 200,000 | திறன் விருத்தி | 14 | 139,491 | 75,638 | |
| 12,390,000 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | 7,377,278 | 7,694,140 | |
| 19,324,290,000 | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **18,998,656,183** | **14,858,305,929** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 503,282 | 16,164,578 | **ஏசீஏ-4** |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 5,307,115 | 3,551,934 | **ஏசீஏ-5** |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | | | |
| | **மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | 5,810,397 | 19,716,512 | |
| | | | 55,042,708,345 | 84,165,593,393 | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | (18,646,267,760) | (14,508,560,102) | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | (18,646,267,760) | (14,508,560,102) | **ஏசீஏ-7** |
| | **பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி** | | - | - | **ஏசீஏ-3** |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | (18,646,267,760) | (14,508,560,102) | |

## 3.2 நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

ஏசீஏ -பீ

**2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான**
**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2021 ரூபா | 2020 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 1,713,683,520 | 1,712,245,303 |
| | | - | - |
| **நிதி சொத்துக்கள்** | | - | - |
| | | - | - |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 7,657,377 | 6,947,352 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | - | - |
| **மொத்த சொத்துக்கள்** | | 1,721,340,897 | 1,719,192,655 |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 7,334,520 | 6,212,738 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 1,713,683,520 | 1,712,245,303 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பீ | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 322,857 | 734,614 |
| *தீர்க்கப்படாத* பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,721,340,897** | **1,719,192,655** |

பக்க இலக்கம் 6 முதல் 38 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் 39 முதல் 41 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

| | | |
|---|---|---|
| ………………… | ………………… | ………………… |
| பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் | கணக்கீட்டு உத்தியோகத்தர் | பணிப்பாளர்(நிதி) |
| பெயர்: எஸ்.ஆர்.ஆட்டிகல | பெயர்:கே.ஜி.கே. விமலவீர | பெயர் : டபிளியு.பி.பி.எஸ்.அபேவர்தன |
| பதவி : செயலாளர், நிதி அமைச்சு | பதவி : பணிப்பாளர் நாயகம் | பதவி: உதவிப் பணிப்பாளர் (நிதி) |
| திகதி : 22/2/22 | திகதி : 22/02/2022 | திகதி : 22/02/2022 |
| S. R. Attygalle<br>Secretary to the Treasury and<br>Secretary to the Ministry of Finance<br>The Secretariat<br>Colombo 01 | Geetha Wimalaweera<br>Director General<br>Department of Development Finance<br>Ministry of Finance<br>The Secretariat<br>Colombo – 01. | W P B S Abeywardana<br>Assistant Director (Finance)<br>Department of Development Finance<br>Ministry of Finance<br>Colombo-01 |

**ஏசீஏ- சீ**

## 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2021 ரூபா | உண்மை திருத்தப்பட்ட 2020 ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | - |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | | |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | 2,174,249 | 17,598,920 |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 36,391,751,969 | 69,652,175,495 |
| முற்பணங்களை அறவிடல் | 2,477,557 | 1,695,759 |
| வைப்புக்களின் பெறுகை | 91,525 | 534,945 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **36,396,495,300** | **69,672,005,119** |
| | | |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடடுக் கொடுப்பனவுகள் | 747,554,557 | 49,713,290 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 35,216,913,485 | 69,168,824,465 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | - | 1,107,363 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | - | |
| முற்பணக் கொடுப்பனவு | 2,774,199 | 1,969,964 |
| வைப்புக் கொடுப்பனவு | 503,282 | 16,164,578 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **35,967,745,523** | **69,237,779,659** |
| | | |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **428,749,777** | **434,225,460** |
| | | |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | - | - |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | - | |
| | - | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | | |
| | | |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:** | | |

| | | |
|---|---|---|
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 428,749,777 | 434,225,460 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **428,749,777** | **434,225,460** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | (428,749,777) | (434,225,460) |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **0** | **-** |
| <u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u> | - | - |
| உள்ளுர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | | |
| *<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>* | - | - |
| உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | 0 | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)** | **-** | **-** |
| **ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **0** | **-** |
| **டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **-** | **-** |

## 4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

### அறிக்கையிடலின் அடிப்படை

**1. அறிக்கையிடப்படும் காலப்பகுதி**

2021 ஜனவரி மாதம் 01ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியானது, இந்நிதிக் கூற்று தொடர்பாக அறிக்கையிடப்படும் காலப்பகுதியாகும்.

**2. அளவீட்டின் அடிப்படைகள்**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்படாதபோது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவிற்கு கிட்டிய ரூபாவில் முன் வைக்கப்பட்டுள்ளது.

**3. வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

**4. சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மீள்மதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

**5. சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரண கணககுளுடன் தொடர்புபட்டதாகும்.

**6. காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2021 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

### 3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

*ரூபா*,000

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு (%) |
| பொருத்தமற்றது | | | | | |

### 3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூபா ,000

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 11,784,650,000.00 | 37,150,150,000.00 | 36,038,241,765.37 | 97% |
| மூலதனம் | 18,144,290,000.00 | 19,324,290,000.00 | 18,998,656,182.66 | 98% |

### 3.7 .நி.பி குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் /திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் /மாவட்டச் செயலகம் / மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா,000

| தொடர் இலக்கம் | அமைச்சு /திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு | | *உண்மையான செலவிவு* | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| | பொருத்தமற்றது | | | | | |
| | | | | | | |

### 3.8 நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா, 000

| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | 31.12.2021 ஆந் திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி | 31.12.2021ஆந் திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி | எதிர் காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடம் மற்றும் கட்டமைப்பு | | | | |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | | 39,428,707.31 | | |
| 9153 | காணி | | | | |
| 9154 | அருவமான சொத்துக்கள் | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | | 1,674,254,812.94 | | |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | | | | |

### 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

**சிங்கள பிரதி இணைக்கப்பட்டுள்ளது.**

**அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்**

**4.1 நிறுவனத்தின் செயலாற்றச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)**

| குறியீட்டுச் சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|
| | **100% - 90%** | **75% - 89%** | **50% - 74%** |
| சிறிய மற்றும் நடுத்தர வருமானமுடையோருக்கான கடன் திட்டம் | 96% | | |
| கூரைமீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி உருவாக்க கடன் நிகழ்ச்சித் திட்டம் | 100% | | |
| பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான நிதியுதவி திட்டம் | 100% | | |
| தேர்ந்தெடுக்கப்பட்ட இயற்கை உர உற்பத்தியாளர்களுக்கு முற்பணம் வழங்கல் | | 88% | |
| சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கான கடன் திட்டம் | 100% | | |
| சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கான ஜே எப் பி ஆர் மானியம் | 100% | | |
| சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான மானியம் | 100% | | |

**அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை**

**5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை காட்டுக**

| இலக்கு / குறிக்கோள் | அடைவுகள் | அடைவுகளின் குறிகாட்டிகள் | இது வரை அடையப் பெற்ற முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | **0% - 49%** | **50% - 74%** | **75% - 100%** |
| **இலக்கு 1-** அனைத்து வடிவங்களிலும் உள்ள வறுமையை | 1ஆ) வறுமையை ஒழிக்கும் நடவடிக்கைகளில் முதலீடு செய்வதனை | 1.ஆ.1. நன்மைகளைப் பெற்றுக் கொள்வதில் பாகுபாடுகளுக்கு | **கடன்களை பதிவழிக்கும் நிகழ்ச்சித் திட்டம்:** கடன்பட்டோரின் எண்ணிக்கை: 45,139 நுண்நிதி நிறுவனங்கள் /நிதிக் | | |

| | | | |
|---|---|---|---|
| ஒழித்தல் | துரிதப்படுத்துவதற்கு வறுமையினால் வாடுவோருக்கு முன்னுரிமை அளித்தல், மற்றும் ஆண் பெண் பால் நிலை உணர்திறன் அபிவிருத்தி உபாயங்கள் என்பன வற்றை அடிப் படையாகக் கொண்டு தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் சாத்தியமான கொள்கை கட்டமைப்பினை உருவாக்கல் | உள்ளாகும் பெண்கள், வறியவர்கள் மற்றும் எளிதில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய குழுக்களுக்கான அரசாங்கத்தின் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினத்தின் தொகை | கம்பனிகளினால் பதிவழிக்கப்பட்ட மூலதனத் தொகை: ரூபா. 1,255.74 மில்லியன்.<br><br>நுண்நிதி நிறுவனங்கள் /நிதிக் கம்பனிகளினால் பதிவழிக்கப்பட்ட வட்டித் தொகை: ரூபா 141.41 மில்லியன்.<br><br>அரசாங்கம் ஏற்கனவே இந்நோக்கத்திற்காக 2021ஆம் ஆண்டில், ரூபா 418.58 மில்லியன்களை செலவு செய்துள்ளது. |
| **இலக்கு 2,** பசியை இல்லாதொழித்து உணவு பாதுகாப்பு மற்றும் விவசாயத்தை முன்னிறுத்தி உணவு பாதுகாப்பு மற்றும் முறையான போசனையை ஏற்படுத்தி நிலையான விவசாய முன்னேற்றத்தை ஏற்படுத்தல் | 2.4) 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான உணவு உற்பத்தி முறைமை களை உறுதிப் படுத்தல், உயிரியல் முறைமைகளின் இருப்பினை உறுதிப் படுத்தி உயிரியல் முறைமைகளை பேணுவதற்கு உறுதிப் படுத்தலும் உயிரியல் கட்டமைப்புக்களை நடாத்திச் செல்வதற்கு உரிய காலநிலை மாறுபாட்டின் காரணமாக வரட்சி, வெள்ளம் மற்றும் இயற்கை இடர் மற்றும் மண் வளத்தின் உயரிய தன்மையை மேம்படுத்தி அம்மண் வளத்திற்கு | 2.4.3) உற்பத்தித் திறன் வாய்ந்த மற்றும் நிலைபேறான விவசாயத்தினை மேற்கொள்ளும் விவசாய நிலங்களின் அளவு | **புதிய முழுமையான கிராமிய கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 67,576<br>2021 வருடத்தில் செலுத்தப்பட்ட மானியத் தொகை மில்லியன் ரூ. 125.40<br>பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கர்) : 260,089<br><br>**"ரன் அஸ்வென்ன"**<br>கடன் திட்டம்<br>கடன்களின் எண்ணிக்கை: 7,970<br>கடன் தொகை: ரூபா 11,469.3 மில்லியன்<br>2021ஆம் ஆண்டில் மானியத்திற்கு பதிலாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மானியத் தொகைக்காக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூ. 718.78 மில்லியன்<br><br>**"கொவி நவோதா" கடன் திட்டம்**<br>கடன் எண்ணிக்கை: 1,451<br>கடன் தொகை: 682.4<br>2021 ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | இசைவான விவசாய முயற்சிகளுக்கு மாற்றம் பெறல் | | திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா : 76.75 மில்லியன்<br><br>**களஞ்சியசாலைகளின் நிர்மாணம்**<br>அறுவடைக் காலத்தில் விலை குறைவடைவதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளும் நோக்குடன் அறுவடை குறைவடையும் காலத்தில் உயரிய விலையை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் நெல், சோளம், சோயா அவரை, எள், கௌபி, மிளகு, வேர்க்கடலை போன்ற விவசாயிகளின் தானிய உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு அனுராதபுரம், புத்தல, மன்னார், கிளிநொச்சி, பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களிலுள்ள 05 களங்சியங்களின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்<br><br>**நெல்லை அசிரியாக மாற்றும் நிகழ்ச்சித் திட்டம்**<br>நெல் கொள்வனவு ஆலைகள் மற்றும் மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களூடாக ரூ. 3, 197 மில்லியன் செலவை ஏற்று நெல் மெ.தொ. 65,726 ஐ கொள்வனவு செய்து சகாய விலை அடிப்படையில் 34,821 மெ.தொ. அரிசி லங்கா சதொச நிறுவனத்தினுடாக நுகர்வோருக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. |
| **இலக்கு 04** தரமான கல்வி: அனைவரும் உள்ளடங்கிய , சமத்துவமான கல்வியையும், வாழ்நாளுக்கான கற்றல் சந்தர்ப்பத் | 4.2) 2030ஆம் ஆண்டளவில், சகல பெண் பிள்ளை களுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும் தரமான ஆரம்ப குழந்தைப் பருவ வளர்ச்சி, பராமரிப்புச் சேவைகள், மற்றும் முன் ஆரம்பக் | 4.2.1) பெண் ஆண் பால் நிலை அடிப்படையில் சுகாதாரம், கல்வி மற்றும் உளவியல் துறைகளில் சிறந்த அபிவிருத்திப் பாதையை நோக்கிப் | **"சிங்கித்தி பாசல" கடன் திட்டம்**<br>கடன் எண்ணிக்கை: 62<br>கடன் தொகை: ரூபா. 63.4 மில்லியன்<br>2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட வட்டி சலுகைக்காக வழங்கப்பட்ட பிணை முறிகளின் பெறுமதி ரூ. 3.88 மில்லியன்<br><br>**"ரெக்கவரன" கடன் திட்டம்**<br>கடன் எண்ணிக்கை : 9 |

| | | | |
|---|---|---|---|
| தினையும் உறுதிப் படுத்துதல் | கல்விக்கு பிரவேசிப்பதற்கான வாய்ப்பு இருத்தல் மற்றும் அவற்றின் மூலம் அவர்கள் ஆரம்பக் கல்வியை மேற்கொள்வதற்கு தயாராக உள்ளரர்கள் என்பதை உறுதிப்படுத்தல் | புறப்படுவதற்கு தயாராக உள்ள 5 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை | கடன் தொகை : ரூ. 44.4 மில்லியன் 2021 வருடத்தில் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்காக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா.1.47 மில்லியன் |
| | 4.7) 2030 ஆம் ஆண்டளவில் கல்விகற்ற அனைவரும் நிலையான அபிவிருத்தியின் பங்களிப்புக்கு அறிவு மற்றும் தகுதியை பெற்றிருத்தல் அவர்கள் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பில் கல்வி மற்றும் நிலைபேறான வாழ்க்கைமுறை, மனித உரிமைகள், சமாதானம் மற்றும் வன்முறையற்ற கலாசாரத்தை விருத்தி செய்தல், குடியுரிமை நெருக்கத்தை மதித்தல் நிலைபேறான அபிவிருத்திக்கு கலாச்சாரப் பங்களிப்பு செய்தலும் உள்ளடங்கும். | 4.7.1 உலகளாவிய குடியுரிமைக் கல்வி II. பாலின சமத்துவம், மனித உரிமைகள் (அ) தேசிய கல்விக் கொள்கைகள் (ஆ) பாட விதானம் (இ) ஆசிரியர் கல்வி மற்றும் (ஈ) மாணவர்களின் மதிப்பீடு ஆகிய சகல மட்டங்களும் உள்ளடங்கிய கல்விமுறை | **“மை பியுசர்” (எனது எதிர்காலம்) கடன் திட்டம்**<br>கடன் எண்ணிக்கை : 729<br>கடன் தொகை : ரூபா 650.5 மில்லியன்<br>2021ஆம் ஆண்டில் அரசங்கத்தினால் செலுத்தப்பட்ட வட்டி மானியத் தொகைக்காக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி : ரூபா 43.95 மில்லியன்<br><br>**“எரம்பும” கடன் திட்டம் கடன்களின்**<br>கடன் எண்ணிக்கை : 175<br>கடன் தொகை : ரூபா 230.99 மில்லியன்<br>2021 ஆம் ஆண்டில் அரசங்கத்தினால் செலுத்தப்பட்ட வட்டி மானியத் தொகைக்காக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி : ரூபா 20.51 மில்லியன் |
| **இலக்கு 05 :** பால் நிலை சமத்து வத்தை அடைவதுடன் அனைத்து பெண்களையு | 5.1 சகல இடங்களிலும் சகல பெண்களுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் எதிரான சகல விதமான பாரபட்சங்களையும் | 5.1.1 பால் நிலை அடிப்படையில் சமத்துவம் மற்றும் பாரபட்சமற்ற நிலைமையை மேம்படுத்தல், வலியுறுத்தல் மற்றும் | **பெண்களுக்கான தொழில் முயற்சிகளுக்கான நிதி உதவிக் கடன் திட்டம்**<br>கடன் எண்ணிக்கை: 112<br>கடன் தொகை: ரூபா. 127.60 மில்லியன் |

| | | | |
|---|---|---|---|
| , சிறுமிகளையுட வலுப்படுத்தல் | இல்லாதொழித்தல் | கண்காணித்தல் தொடர்பான சட்டரீதியான கொள்கைச் சட்டகம் ஒன்று உள்ளதா இல்லையா என்பது தொடர்பாகும். | |
| **இலக்கு 07** அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய நியாயமான நம்பகத் தன்மை கொண்ட நிலைபேறான மற்றும் நவீன சக்தியினை உறுதி செய்தல். | 7. ஆ.) 2030ஆம் ஆண்டளவில் விசேடமாக குறை விருத்தியடைந்த நாடுகள் மற்றும் ஏனைய சிறிய தீவுகள், நிலத்தால் முடக்கப்பட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் உட்பட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் உட்பட அவர்களது வேலைத்திட்டங்களுக்கு ஏற்ப நவீன மற்றும் நிலையான சக்திவாய்ந்த சேவை வழங்குநர்கள் அதிகரித்தல் மற்றும் தொழில்நுட்பத்தை மேலும் விரிவுபடுத்தல் அபிவிருத்தி அடைந்த வரும் ராஜ்யங்களில் ஆதரவளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ப, உட்கட்டமைப்பினை விரிவடையச்செய்தல், | 7.ஆ.1 மொத்த உள் நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மின்வலு வினைத்திறனில் முதலீடுகளும், மற்றும் நிலைபேறான அபிவிருத்திச் சேவைகளுக்கான உட்கட்டமைப்பு மற்றும் தொழில் நுட்பத்திற்கான நிதி மாற்றல்களில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் | **“ரிவி பல சவி” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 453<br>கடன் தொகை: 157.6 மில்லியன் ரூபா<br>அரசங்கத்தினால் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்கு பதிலாக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி 13.34 மில்லியன் ரூபாவாகும்<br><br>**கூரை மீது பொருத்தப்படும் சூரிய சக்தியால் உருவாக்கப்படும் சூரிய சக்தி உருவாக்கக் கடன் கருத்திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 5,449<br>கடன்தொகை ரூபா.9,415.25 மில்லியன் |
| **இலக்கு 08** அனைவருக்கும் எந்நாளும் போசாக்கான | 8.3. தொழில் முயற்சிகளுக்கு புதிய மற்றும் தொழில் முயற்சியாளர்க்களு | 8.3.1. பால்நிலை வாரியாக விவசாயமற்ற சேவையாளர்களுக்கு | **சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கான கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 192<br>கடன்தொகை 1,908 மில்லியன் ரூபா |

| | | | |
|---|---|---|---|
| நிலையான பொருளாதார அபிவிருத்தி மற்றும் வினைத்திறனுள்ள தொழில் வாய்ப்பு ஏற்படுத்தல் | க்கான புதிய தொழில் முயற்சிகளுக்கு ஆதரவு நல்கும் அபிவருத்தியாளர்களுக்கு கொள்கைகளை விருத்தி செய்தல் நிதி நிலைமைகளுக்கு பங்களிப்பு நல்கும் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்த உதவுதல் | விவசாயமல்லாத துறைகளில் தொழிலாளர்களுக்குமுறையற்ற | **"ஜய இசுர" கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 1,000<br>கடன் தொகை :ரூபா.21,357.4 மில்லியன்<br>2021ஆம் அரசங்கத்தினால் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்கு பதிலாக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி 1,487.64 மில்லியன் ரூபா<br><br>**"பசுமைக் கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 242<br>கடன் தொகை :ரூபா. 791.5 "மில்லியன்<br>2021ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்கு பதிலாக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி : ரூபா: 39.99 மில்லியன்<br><br>**திரி சவிய**<br>கடன்களின் எண்ணிக்கை : 572<br>கடன் தொகை 413.3 மில்லியன் ரூபா<br>2021ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்கு பதிலாக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி 9.80 மில்லியன் ரூபா<br><br>**"ரிய சக்தி"**<br>கடன்களின் எண்ணிக்கை: 178<br>கடன் தொகை :ரூபா. 613.8 "மில்லியன்<br>2021ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்கு பதிலாக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி 148.00 மில்லியன் ரூபா<br><br>**"மாத்ய அருண" கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 258<br>கடன் தொகை 76.9 மில்லியன் ரூபா<br>2021ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்கு பதிலாக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமிதி 15.02 மில்லியன் |

| | | | |
|---|---|---|---|
| | | | **“சங்சாரக பொட்டோ” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 1,198<br>கடன் தொகை 538.46 மில்லியன் ரூபா<br>2021ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்கு பதிலாக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி 76.90 மில்லியன் ரூபா<br><br>**“சிட்டி ரைட்” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 8<br>கடன் தொகை :ரூபா 52.1 மில்லியன்<br>2021ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்கு பதிலாக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி 3.08 மில்லியன். |
| **இலக்கு 11** நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள் உள்ளடக்க மான பாதுகாப்பா ன உறுதியான மற்றும் நிலைபேறா னதாக அமைத்தல். | 11.1) 2030 ஆம் ஆண்டளவில் சகலருக்கும் போதிய, பாதுகாப்பான மற்றும் தாங்கிக் கொள்ளக் கூடிய அளவிலான வீடு மற்றும் அடிப்படைச் சேவைகளுக்கும் மற்றும் மேம்படுத்தப்பட்ட சேரிகளுக்குமான அணுகலை உறுதிப்படுத்தல் | 11.1.1 குடிசைகள், மற்றும் சேரிகளில் வாழும் சகரசனத்தொகை யின் பிரிவு, போதிய அளவிலில்லாத வீடுகளில் முறை சாராத முறையில் குடியேறி வாழும் நகரச் சனத்தொகையின் அளவு | **“ சொந்துரு பியச” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 14,834<br>கடன் தொகை 2,958.3 மில்லியன் ரூபா<br>2021ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்கு பதிலாக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி 153.43 மில்லியன் ரூபா<br><br>**“ஹோம் ஸ்வீட் ஹோம்: கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 1,282<br>கடன் தொகை 4,585.2 மில்லியன் ரூபா<br>2021ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்கு பதிலாக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி 204.76 மில்லியன். ரூபா<br><br>**“சிஹின மாளிகா” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை: 247<br>கடன் தொகை: Rs. 1,332.5 மில்லியன்<br>2021ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட மானியத் தொகைக்கு பதிலாக விநியோகிக்கப்பட்ட திறைசேரி முறிகளின் பெறுமதி ரூபா. 101.29 மில்லியன். |

## 5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டில் நாட்டிலுள்ள இயற்கை வளங்களை தற்கால சந்ததியினரின் முறையான நெறியாள்கையின் கீழ் எதிர்கால சந்ததியினருக்கு வளங்களின் உரிமையை பெற்றுக் கொடுத்தல் நிலையான அபிவிருத்தியின் நோக்கமாகும். அவ்வாறான இலக்குகளை அடையாளம் கண்டு கொள்வதுடன் 2015ஆம் வருடத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினூடாக அதன் உறுப்புரிமை நாடுகள் 193இன் 17 துறைகளை ஒருங்கிணைக்கும் வகையில் 2030ஆம் வருடமளவில் தன்னிறைவடையும் 17 நிலையான அபிவிருத்தி துறைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கமைய மனிதவள, சமூக, பொருளாதாரம் என்றவாறான பிரதான நான்கு தூண்களையும் இணைத்து நிலையான சுற்றாடல், மனித உரிமை, சமூக நிலையியல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய துறைகளில் மதிப்புள்ள நிலையான அபிவிருத்தி செய்து பொருளாதாரத்தை மேம்படுத்துதல் இதன் பிரதான எதிர்பார்ப்பாகும். இந்த நிலைபேறான மற்றும் 2030ஆம் வருடத்தின் இலக்குகளின் அருகாமையை பெறுவதற்காக இலங்கை பலவாறான செயன்முறைகளை செய்துள்ளதுடன் அதற்காக அரசதுறை மற்றும் அரச சார்பற்ற துறைகளூடாக உலகளாவிய துறை அபிவிருத்திகளை அடிப்படையாக கொண்டு வேலை முன்னெடுக்கப்படும்.

இந்த நிலையான அபிவிருத்திக்கு முக்கிய மற்றும் முன்னுரிமையின் ''சகல துறைகளிலும் ஏழ்மையை இல்லாதொழித்தல்'' அடிப்படையில் உற்பத்தியை அதிகரித்தலுக்காக முதலீடுகளை விரைவு படுத்தலுக்கான முன்னுரியளித்து உரிய துறைகளுக்கான அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக, பால் இன சமத்துவத்திற்கு முன்னுரிமையளிப்பது மேன்மையானதாகும். பொருளாதார அபிவிருத்தி செயல்முறைகளை முக்கியமான அங்கமொன்றான நுண், சிறிய மற்றும் நடுத்தர வருமானமுடைய தொழில் முயற்சியாளர்களுக்கான முக்கியத்துவத்தை அறிந்து கொள்வதுடன் அதற்கான உரிய அரச பங்களிப்புடன் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னுரிமையளிப்பதுடன் அபிவருத்தி நிதித் திணைக்களத்தினால் நுண், சிறிய மற்றும் நடுத்தர வருமானமுடையோர் பிரிவை இலக்காக கொண்டு பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ் வேலைத் திட்டங்களுக்கிடையில் சிறிய மற்றும் நடுத்தர வருமானமுடைய தொழில் முயற்சியாளர்களுக்கு கொவிட் காலத்தில் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தோருக்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட பணி மூலதன கடன் திட்டம் பிரதானமானதாகும்.

2016ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நன்கொடையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறை கடன் கருத்திட்டத்தினூடாக ஐஅடொ 175 மில்லியன் தொழில் முயற்சிகளின் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக 2020ஆம் வருடமளவில் உயரிய முறையில் முடிவுறுத்தியதுடன் அதன் அடுத்த கட்டத்தை 2021 வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய இக்கட்டத்தில் ஐ.அ.டொ. 65மில்லியன் பெற்றுக் கொடுப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியதுடன் அதில் ஐ.அ.டொ. 45ஐ தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறை கடன் திட்டத்தை மேலும் முன்கொண்டு செல்வதற்கும், ஐ.அ.டொ. 20 மில்லியன் சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு புது தேயிலை நடுகை மீள பயிர் செய்தல், தளத்தை தயார்படுத்தல் மற்றும் இயந்திரமயமாக்கல் ஆகியவற்றுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக புதிய கருத்திட்டமாக செயற்படுத்தும் கடன் திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2021ஆம் வருடம் நிறைவடைகையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான கடன் திட்டத்தின் கீழ் பங்களிப்பு நிதி நிறுவனங்களுடன் 192 தொழில் முயற்சியாளர்களுக்கு ரூ. 1,908 மில்லியன் தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது. அந்த கடன் தொகையில் அதிக கடன் தொகை முறையான விவசாயம், உற்பத்திப் பிரிவு சுற்றுலாத்துறை மற்றும் வேறு

பிரிவுகளுக்கிடையில் அன்னளவாக ரூ. 402, 356, 245 மற்றும் 173 மில்லியன் அடிப்படையில் 143 பேருக்கு பகிரந்தளிக்கப்பட்டுள்ளது.

அதே போல, கொவிட் 19 தொற்று நோய் பரவலின் காரணமாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் அவசர நிதித் தேவைகள் தீவிரமாக அதிகரித்தமையின் காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் மீது ஏற்பட்டுள்ள மோசமான பாதிப்பைக் குறைக்கும் நோக்குடனும், மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் ஊழியர்களைப் பாதுகாப்பதற்காகவும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை மீண்டும் வலுப்படுத்துவதற்காக குறுகிய கால மூலதனக்கடன் வசதிகளை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் அவசர நிதி உதவியொன்றினை வழங்குமாறு விடப்பட்ட கோரிக்கைக்கான பதிலாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான அவசர எதிர்கொள்ளல் சேர்க்கை'' (SME Emergency Response Component) ஒன்றாக ஐஅடொ 100 மில்லியன் ரூ. 19,348 மில்லியன் வழங்கப்பட்டது. அவ்வாறே 11,365 மில்லியன் ரூபா 2,107 தொழில் முயற்சியாளர்களுக்கிடையில் 10 பங்களிப்பு நிதி நிறுவனங்கள் ஊடாக வழங்கப்பட்டதுடன் கடன் தொகையில் 26% கடன் பிணையற்ற கடனாக வழங்கப்படுவது விசேட அம்சமாகும்.

மேலும் தேயிலை தொழில்துறை இலங்கையின் வருவாயில் முதலிடம் வகிப்பதால் அதற்காக சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களால் வழங்கப்படும் பங்களிப்பை மேலானதாகக் கொண்டு சிறிய தேயிலை தோட்ட உரிமையாளர்களுக்கு புது தேயிலை நடுகை, மீள் பயிர்செய்கை, மண் பதப்படுத்தல் மற்றும் இயந்திரமயமாக்கல் மற்றும் சலுகைகளை வழங்குவதற்கான புதிய கருத்திட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ஐ.அ.டொ. 20 மில்லியன் வழங்கப்படுவதுடன், 2021ஆம் வருட இறுதியில் 847 மில்லியன் ரூபா 10 பங்களிப்பு நிதி நிறுவனங்களினூடாக பகிர்ந்தளிக்கப்பட்டது. மேலும் ஐ.அ.டொ. 0.5 மில்லியன் ரூபா தேயிலை மீள் நடுகை மற்றும் மீள் பயிர் செய்கைக்கு கடன் பெற்றோரை ஊக்கப்படுத்தும் நோக்கில் பெற்ற கடன் தொகையில் 20% ஐ மீண்டும் செலுத்தாதிருக்கும் அடிப்படையில் அன்பளிப்பாக அளிக்கப்படும். எவ்வாறெனினும், வருட இறுதியில் 847 மில்லியன் ரூபாவின் நூற்றுக்கு 70% க்கு அன்னளவான தொகை வருட முடிவில் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தொகையில் நூற்று ஐந்து வீதம் தேயிலை மீள் பயிர்செய்கைக்காகவும், 23% வீதமான தொகை தேயிலை புதுக்கன்று நடுகைக்காகவும் முதலீடு செய்வது, எதிர்கால தேயிலை உற்பத்தி மற்றும் தேயிலையுடன் தொடர்புடைய ஏற்றுமதிக்காகவும் அத்துறையுடன் தொடர்புடையோரின் வருமானத்தை இலக்காகவும் கொண்டு அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வழிவகையாகும்.

''உணவு பாதுகாப்பு மற்றும் அதிக போசணையை பெற்றுக் கொள்வதற்காக நிலையான விவசாய மேம்பாட்டை பேணல்'' நிலையான அபிவிருத்தியில் மேலுமொரு முக்கிய பணியாகும். அதற்கமைய விவசாயத்துறையில் முதலீடுகளை மேற்கொண்டு அதன் தரமான உற்பத்திகளை உயர்த்துதல் அத்தியாவசியமாகும். பசியால் வாடும் மக்கள் தொகையை குறைத்து உணவு பாதுகாப்பு மற்றும் நச்சுத்தன்மையற்ற அதிக போசனையுள்ள உணவு வேளையொன்றை பெற்றுக் கொள்வதற்கான தன்மை ஏற்படுவதுடன் பட்டினியால் வாடும் தரப்பினருக்கு போசனையுடன் கூடிய உணவை வருடம் முழுவதும் பெற்றுக் கொடுக்க முடியும் என்பதை உறுதி செய்ய முடியும். அதற்கமைய அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் மூலம் நெல் கொள்வனவு வேலைத்திட்டம் மற்றும் இயற்கை உரம்

பெற்றுக் கொடுக்கும் வேலைத் திட்டம் பயனுள்ளதாக அமைந்ததுடன் இதன் மூலம் உரிய இலக்கை அடைவதற்கு பங்களிப்பு செய்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தலை நோக்காகக் கொண்டு அரசினால் விவசாயிகளுக்கு இரசாயண உர மானியம் வழங்கப்பட்டதாயினும் அதன்மூலம் நாள்பட்ட நோய்கள் பரவல்கள், இயற்கை நீர் நிலைகள் மாசுபடல் என்ற பல்வேறுபட்ட பக்கவிளைவுகள் காரணமாக நாட்டினுள் பல பிரச்சினைகள் ஏற்பட்டது. அதற்கு தீர்வாக அரசினால் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் தொடக்கம் சகல இரசாயண உரம், கிருமிநாசினி, தெளிப்பான்கள் இறக்குமதிகளை தடை செய்தமையால் தேசிய விவசாயத்துறையானது சேதனப் பசளை பாவனையை ஊக்குவிப்பதற்கு திட்டமிட்டது. அதற்கமைய தங்களால் உற்பத்தி செய்யப்பட்ட சேதனப் பசளையை பயன்படுத்தி விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அதிகபட்சம் 2 ஹெக்டேயர் என்ற அடிப்படையில் 2021/22 பெரும்போகத்திற்காக ஒரு ஹெக்டேயருக்கு 12,500/- ரூபா வீதம் மானியத்தை பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. சேதனப் பசளைத் தேவையை பூர்த்தி செய்வதற்காக சேதனப் பசளை உற்பத்தியை மேற்கொள்ளும் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவாக 787 மில்லியன் ரூபா முற்பணமாக இந்த திணைக்களத்தினூடாக வழங்கப்பட்டது. எவ்வாறெனினும் நெற் பயிர்செய்கைக்காக உள்நாட்டு சேதனப் பசளை உற்பத்தி போதுமானதாக இல்லாமையினால், நெநோ நைட்ரஜன் திரவ உரம் மற்றும் நெநோ நைட்ரஜன் தெளிப்பான்கள் மற்றும் நைட்ரஜன் தேவைப்பாடுகளை பெற்றுக் கொள்வதற்காக இயற்கை பொட்டாசியம் குளோரைட் இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் விலங்குணவு உற்பத்திக்காக உள்நாட்டு சோள உற்பத்தி போதாமையினால் கோதுமை தானியம் 200,000 மெ.தொ. மற்றும் 40,000 மெ.தொ. சோளம் ஆகியவற்றை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டதுடன் கடந்த வருட இறுதியில் கோதுமை தானியம் மற்றும் சோளம் ஆகியன முறையே 168,565 மெ.தொ. மற்றும் 15,130 மெ.தொ. இறக்குமதி செய்யப்பட்டது.

பொது மக்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக அரசின் தலையீட்டுடன் 2021ஆம் வருடத்தில் அரிசி, தானியம் மற்றும் மரக்கறி வகைகளை தாங்கிக் கொள்ளக்கூடிய விலைகளில் சந்தையில் பெற்றுக் கொள்வதற்கான வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. விசேடமாக கொவிட் - 19 பெருந்தொற்றின் காரணமாக நாட்டில் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்தின் காரணமாக மக்களின் அன்றாட வாழ்வில் ஏற்பட்ட விளைவுகளை கையாள்வதற்கு அரசினால் இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதற்கமைய, மக்களின் பிரதான உணவான அரிசியின் விலை அதிகரித்தமையினால் பாவனையாளர்கள் முகம் கொடுத்த பிரச்சினைகளை கருத்தில் கொண்டு சகாய விலை வேலைத்திட்டத்தின் கீழ் அரசினால் 2021ஆம் வருடத்தில் வெற்றிகரமாக நெல் கொள்வனவு இடம் பெற்றது. நெல் கொள்வனவு சபை மற்றும் மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் மூலமாக சிறிய மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்கள் ஊடாக ரூ. 3,197 மில்லியன் செலவை ஏற்று 65,726 மெ.தொ. நெல்லை கொள்வனவு செய்து சகாய விலையில் 34,821 மெ.தொ. அரிசி லங்கா சதொச நிறுவனத்தினூடாக பாவனையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது.

அத்துடன், கொவிட்-19 பெருந்தொற்றின் பாதிப்பு காரணமாக இறக்குமதி செய்யப்படும் பருப்பின் விலை அதிகரித்தமையினால் இலகு உணவாக கொள்ளப்படும் உள்நாட்டு பயற்றம் பருப்பை பாவனையாளர்களுக்கு சகாய விலையில் பெற்றுக் கொடுப்பதற்காக அரசின் தலையீட்டுடன் இவ்விடயம் கையாளப்பட்டது. அதற்கமைய அம்பாறை, அநுராதபுரம், பொலநறுவை, மொனராகலை, வவுனியா, இரத்தினபுரி மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ரூ. 509 மில்லியன் செலவை ஏற்று, 413 மெ.தொ. பயறு கொள்வனவு செய்து லங்கா சதொச விற்பனை வலையமைப்பினூடாக ஒரு கிலோகிராம் 225 ரூபா என்ற சகாய விலையில் பாவனையாளர்களுக்கு விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதனூடாக பாவனையாளர்களுக்கு அதிகரித்த வாழ்க்கை செலவை சமாளித்து தமது போசனை தேவையை பூர்த்தி செய்ய முடிந்ததுடன், அத்துடன் கிராமிய பிரதேச பயறு பயிர்ச்செய்கையாளர்கள் தமது உற்பத்திகளை அதிக விலைக்கு விற்பனை செய்ததன் மூலம் தமது அதிகரித்த வாழ்க்கை செலவை சமாளிப்பதற்கான வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருந்தது.

மேலும், மரக்கறி வகைகளின் விலை அதிகளவில் அதிகரித்தமையினால் நகர்வாழ் மக்களின் வாழ்வில் ஏற்பட்ட கஷ்ட்டங்களை நிவர்த்திப்பதற்காக ஒரு மாவட்டத்திற்கு 3 மில்லியன் கணக்கில் முதலீடு செய்து சனத்தொகை அடர்த்தியான கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர் ஊடாக சகாய விலையில் மரக்கறிகளை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசினால் ஏற்கப்பட்ட இவ்வாறான செயற்பாடுகளினால் அரை நகர்புறம், மற்றும் நகர்புறங்களில் வாழ்பவர்களுக்கு போசனையுள்ள உணவு குறைந்த விலையில் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

ஆண் பெண் என்ற பால் ரீதியான பாரபட்சங்களை இல்லாதொழித்து பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை வலுப்படுத்தி நிலைபேறான அபிவிருத்திகளில் ஈடுபடுத்துதல் மேலுமொரு இலக்காகும். நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கும், அவர்களை பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்பு செய்வித்தல் முக்கியமானதொன்றாகவிருப்பதால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் ‘‘பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான நிதி உதவித் திட்டம்’’ (Women Entrepreneurship Initiative – We-Fi) நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கமைய, பெண்களது அறிவை விருத்தி செய்து தொழில் முயற்சியாளர்களாக மாறுவதற்கான சந்தர்ப்பம் கிட்டியதுடன் அதனூடாக தங்களது குடும்ப வருமானத்துடன் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பங்களிப்பு செய்கின்றனர்.

இச்செயற்றிட்டத்தினூடாக பெண் தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்துவதற்காக அவர்கள் தமது வியாபாரங்களை ஆரம்பிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் பெற்றுக் கொள்ளும் கடன் தொகையில் 10% தொகையை மீண்டும் செலுத்தாத நன்கொடையாக வழங்கப்பட்டது. அபிவிருத்தி குன்றிய பிரதேசங்களான வடக்கு, கிழக்கு, ஊவா, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் வாழும் பெண் தொழில்முயற்சியாளர்களினால் பெற்றுக்கொள்ளப்படும் கடன் தொகைக்கு இந்நன்கொடையானது 15 சதவீதமாக உள்ளதோடு, அவர்களுள் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நடாத்தப்பட்ட பெண் தொழில்முயற்சியாளர்களுக்கான பயிற்சியைப் பெற்றுக் கொண்ட பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு 10% நன்கொடையுடன் மேலதிகமாக நன்கொடையொன்றும் வழங்கப்படும். அதற்கமைய அப்பயிற்சியைப் பெற்றுக் கொண்ட பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு 20 சதவீத நன்கொடையும், மற்றும் அபிவிருத்தி குன்றிய பிரதேசங்களில் உள்ள பெண் தொழில்முயற்சியாளர்கள் அப்பயிற்சியைப் பெற்றிருந்தால்

அவர்களுக்கு 25 சதவீத நன்கொடையும் உரித்தாகும். 10 அரச மற்றும் தனியார் வங்கிகள் ஊடாக இக்கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுன் 112 பெண் தொழில் முயற்சியாளர்களுக்கிடையில் 128 மில்லியன் ரூபா அன்பளிப்பாக அளிக்கப்பட்டதுடன் பெண் தொழில் முயற்சியாளர்களை வலுப்படுத்தியதனூடாக நாட்டில் நிலவும் ஆண் பெண் தொழிற்படைக்கிடையில் உள்ள இடைவெளியை ஓரளவிற்குக் குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது.

அனைவராலும் தாங்குமளவு நிலைபேறான நம்பத்தகுந்த வலுசக்தியை பெற்றுக் கொடுத்தல், நிலையான அபிவிருத்தியின் இன்னுமொரு பிரதான நோக்கமாகும். அனைத்து பொருளியல் துறைகள் தொடர்பாகவும் அடிப்படை தேவையான வலுசக்தியை விருத்தி செய்வது அத்தியாவசியமாகும். நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் மின்சக்தி பாவனையினால் ஏற்படும் பொருளாதார விருத்தியின் மகத்தான நன்மைகள் கிடைக்கப் பெற்றதெனினும், அதன் கேள்விக்கான பொருத்தமான வழங்கல்களை மேற்கொளவதில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. நீர்மூலம் மின்சாரம் பெற்றுக் கொடுப்பது இலாபமானதெனினும் நீர் பற்றாக்குறை காரணமாக கரிம எண்ணெய் பாவனைக்கு மாற்றமடைய வேண்டியுள்ளது. அதனால் கரிம எண்ணெய்க்கு பதிலாக குறைந்த செலவில் சூழலுக்கு இசைவான மின்சக்தியை பெற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதற்காக “கூரை மீது பொருத்தப்படும் சூரியசக்தி மூலம் மின்சாரம் பெற்றுக் கொள்ளும் கடன் திட்டம்” 2019ஆம் வருடத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கருத்திட்டத்திற்காக 9,415 மில்லியன் (ஐ.அ.டொ. 50) தொகை கிடைக்கப் பெற்றதுடன் அம்முழுத் தொகையும் கருத்திட்டம் முடிவடையும் முன்னர் 5,449 கடனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு முழுக் கடன் தொகையும் வெற்றிகரமாக பயன்படுத்தி முடிவுறுத்தப்பட்டது. அக்கடன் தொகையில் 48 வீதம் 4,588.67 மில்லியன் தொகை அதிக கேள்வியுள்ள மாவட்டங்களான கொழும்பு, யாழ்ப்பாணம், கம்பஹா ஆகிய மூன்று மாவட்டங்களில் பகிரப்பட்டதுடன் முழு கடன் தொகையின் 71% வரையில் வீட்டுப்பாவனைக்கான கடனாகவும் மிகுதி வர்த்தக நோக்கங்களுக்காகவும் வழங்கப்பட்டது. மேலும், கருத்திட்டத்தினூடாக மெகா வோட் 70ஐ விட அதிகமானளவில் தேசிய மின்னுற்பத்திக்கு பங்களிப்பு செய்வதற்கு சந்தர்ப்பம் அமைந்ததுடன் கருத்திட்டத்திற்கான அதிக கேள்வி மற்றும் சுற்றாடலுக்கு இசைவான வலுசக்தி பிரயோகத்திற்கு ஊக்கமளிப்பதற்கு இதன் இரண்டாவது கட்டமான 50 ஐ.அ.டொ. 2022ஆம் வருடத்தில் கிடைக்கப்பெறவுள்ளது.

**அத்தியாயம் 06 – மனித வள விபரம்**

**6.1 பதவியணி முகாமைத்துவம்**

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | பதவி வெற்றிடம் /(அதிகப்படியான )** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 21 | 13 | 08 |
| மூன்றாம் நிலை | 01 | 01 | 00 |
| இரண்டாம் நிலை | 23 | 22 | 01 |
| ஆரம்ப நிலை | 12 | 12 | 00 |

**6.2 **பதவியணி பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவன செலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக**

வெற்றிடங்களுக்குரிய கடமைகள் ஏனைய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டன.

**6.3 மனித வள அபிவிருத்தி**

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பயிற்றப் பட்ட பதவியினர் எண்ணிக்கை | நிகழ்ச் சித் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா ’000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு ) | வெளியீடு/ பெற்றுக் கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள் நாட்டு | வெளி நாட்டு | | |
| சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களை டிஜிட்டல் மயப்படுத்த தரவுகளை உள்ளீடு செய்தல் | 1 | 04 நாள் | | | உள்நாடு | கனனி அடிப்படையிலான தரவுகளை SMEs காக முதலீடுகளை தீமானித்தல் |
| கணக்கியல் செயன்முறை மற்றும் நடைமுறை செயற்பாடுகள் | 01 | 02 நாள் | 10,000 | | உள்நாடு | கணக்கியல் நடைமுறை செயற்பாடுகள் தொடர்பில் மேலான அறிவு பெறப் பட்டது |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அலுவலக முறைமை மற்றும் நிதி முறைமை | 01 | 02 நாள் | 8,000 | | உள்நாடு | அலுவலக முறைமை மற்றும் நிதி முறைமை தொடர்பில் மேலான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது. |
| கொள்முதல் நடைமுறை | 01 | 01 நாள் | 5,000 | உள்நாடு | | கொள்முதல் நடைமுறை தொடர்பிலான புதிய சட்டதிட்டங்கள் தொடர்பிலான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது |
| அரச வாகனங்கள் பராமரிப்பு | 01 | 01 நாள் | 5,000 | உள்நாடு | | வாகனங்களின் பராமரிப்பு தொடர்பில் பயிற்சி பெற்றுக் கொள்ளப்பட்டது. |
| அலுவலக உதவியாளர் சேவையின் கடமை பயிற்சி | 01 | 02 நாள் | 8,000 | உள்நாடு | | அலுவலக கடமைகளை முறையாக நடாத்திச் செல்வது தொடர்பிலான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது. |
| சாரதிகளின் திறமை விருத்தி | 01 | 02 நாள் | 8,000 | உள்நாடு | | விடயம் தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இயலுமாயிருந்தது. |

* நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை
சுருக்கமாக விளக்குக

**அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை**

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதைப்பற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது? |
|---|---|---|---|---|
| **1.** | **பின்வரும் நிதி அறிக்கைகள் /கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள் ) | பொருத்தமற்றது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.6 | ஏனைய | இணக்கமானது | | |
| **2.** | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/*2018* இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொதுதிறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | | | |
| 2.7 | பொருட் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.8 | இருப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **3.** | **நிதிக்கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லதுஅதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **4.** | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| **5.** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| **6.** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134 (2) DMA / 1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல் | இணக்கமானது | | |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல். | இணக்கமானது | | |
| **7.** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு** | | | |
| 7.1 | DMA 1-2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| **8.** | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல 01/ 2017 ,சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கொம்ப்ரோலர் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 அத்தியாயத்தின் படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | இணக்கமானது | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கையின் இல 05/2016 பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம் பெற்றது | இணக்கமானது | | |
| **9.** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல். | | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுத்ல வேண்டும். | பொருத்தமற்றது | | |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.4 | ஓவ்வொரு வாகன விபத்தும் நி.பி. 103,104,109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் .12.2 9 பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016 / 30 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது | | |
| **10.** | **வங்கிக் கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 10.3 | வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல். | இணக்கமானது | | |
| **11.** | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளின் வரையறைகளை மீறாத படி செலவிடல். | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி.94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது | | |
| **12.** | **அரச அலுவலர்களின் முற்பணக்கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல். | இணக்கமானது | | |
| 12.2. | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல் | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடைத்தல் | | | |
| **13.** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **14.** | **முற்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைதிறைசேரி செயற்பாட்டு திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல்,அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும். | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுத்தல் வேண்டும். | இணக்கமானது | | |
| **15.** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின் படி சேர்க்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும். | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **16.** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல். | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/ 2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| **17.** | **பொது மக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | இணக்கமானது | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படிஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **18.** | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல: 05/ 2008 மற்றும் 05/ 2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் /பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்த வரை பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | | | |
| **19.** | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02 /2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கமானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனித வள மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது | | |
| **20.** | **கணக்காய்வு பதிவுகளுக்கான பொறுப்புகள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைச் சரி செய்தல். | இணக்கமானது | | |